Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 147
தபாலகேட்பு. எண். 49
போன் 389
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக ஆனி 24 ரபி: ஆகிர் 10 ஞாயிற்றுக்கிழமை (7-7-68)

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

# மாவட்டசபை மசோதா: இன்று எதிர்காலம் தெரியும்

## ஆட்சிமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

### மசோதா வருமென்பதில் தமிழரசார் நம்பிக்கை

கொழும்பு, ஞாயிறு

ஆட்சிமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் இன்று காலை ஆட்சி மன்றப் பேரவையில் கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம்கோபல்லவா நிகழ்த்தும் சிம்மாசனப்பிரசங்கத்துடன் ஆரம்பமாகிறது. மாவட்டசபைகள் பற்றி சிம்மாசனப்பிரசங்கத்தில் நிச்சயமாகக் குறிப்பிடப்படுமென அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மாவட்டசபைகள் பற்றி சிம்மாசனப்பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டால் சபையிலிருந்து வெளிநடப்புச்செய்ய எதிர்க்கட்சியினர் திட்டமிட்டுள்ளனர்.

மாவட்டசபைகள் பற்றி சிம்மாசனப்பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டாலும் உடனடியாக மாவட்டசபைகள் மசோதா கொண்டு வரப்படமாட்டாதென்றும், மாவட்டசபைகள் அமைப்பதற்காக இதுவரை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் பற்றியும் இனி மேற்கொள்ளப்படவிருக்கும் முயற்சிகள் பற்றியும் சிம்மாசனப்பிரசங்கத்தில் கூறப்படுமென்றும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

## மாவட்டசபை அமைக்கும் முயற்சி கைவிடப்படுமாம்

மாவட்டசபைகள் அமைக்கப்படுவதை பெரும்பான்மையானோர் வன்மையாக எதிர்ப்பதாலும் ஜனநாயக அமைப்பு ஸ்தாபனங்கள் பல எதிர்ப்பதாலும் வெளத்தமதத் தலைவர்கள் ஆட்சேபிப்பதாலும் மாவட்டசபைகள் அமைப்பதற்கான மசோதாவைக் கொண்டுவரும் யோசனையைப் பிரதமர் கைவிடுவதற்குத் தீர்மானித்திருப்பதாக ஓர் ஆங்கிலத் தினசரி செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆனாலும் சிம்மாசனப்பிரசங்கத்தைத் தொடர்ந்து மாவட்டசபைகள் அமைப்பதன் நோக்கம் பற்றி நாடுமுழுவதிலும் பிரசாரம் செய்வதற்கு பிரதமரும் ஆளும் கட்சியினரும் தீர்மானித்திருப்பதாகவும் அதன்பின்னரே மாவட்டசபை மசோதாவைப் பிரதமர் கொண்டுவர உத்தேசித்திருப்பதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## மாவட்டசபைகள் பற்றி இன்னும் நம்பிக்கை

இன்று ஆரம்பமாகும் ஆட்சி மன்றத்தின் புதிய கூட்டத்தொடரில் மாவட்டசபைகள் மசோதாவை பிரதமர் கொண்டுவருவார் என்று தாங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாக தமிழரசுப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் முடிவடைந்த உடனடியாக மாவட்டசபைகள் மசோதாகொண்டு வரப்படாவிட்டாலும் சில வாரங்களின் பின்னராவது மசோதாவை பிரதமர் கொண்டு வருவாரென்று அவர் தெரிவித்தார்.

## நூதனசாலைக்கு இந்தியா அன்பளிப்பு

பம்பலப்பிட்டி, சனி

ஹரப்பா, மொகாந்தஜரோ, கல்வெட்டு சாஸனங்கள், சின்னங்கள் சிற்பங்கள் போன்றவற்றின் மாதிரி படங்கள், நிழல் படங்களை இந்திய அரசின் சார்பில் இன்றுகாலை இந்திய ஸ்தானிகர் திரு. கண்டேவியா இலங்கை நூதனசாலைக்கு அன்பளிப்பு செய்தார். இலங்கையின் சார்பில் கல்வி, கலாசார அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரிய கொல்ல அன்பளிப்பைப் பெற்றுக்கொண்டார்.

மாவிட்டபுரம்

## தொண்டர்கள் பற்றி அட்டர்ணிஜெனரலிடம் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் ஆலயப் பிரவேசம் செய்பவர்களை தடுத்து நிறுத்தும் தொண்டர்படையினரை அங்கிருந்து அகற்றுவது சம்பந்தமான ஆலோசனைகளை வடபகுதி பொலிஸ் அதிபர் அட்டர்ணி ஜெனரலிடம் கோரவிருக்கின்றார்.

இதுசம்பந்தமாக புரட்சிவாத சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த இருவாளர்கள் ஜேக்கப் தம்பிராசா, குமாரசாமி ஆகியோர் நேற்று முன்தினம் பொலிஸ் சுப்பிரிண்டனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

கந்தசுவாமிகோவிலில் தொண்டர்படையினர் ஆலயப்பிரவேசம் செய்பவர்களை தடுத்து நிறுத்துவது சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்துக்கு புறம்பானது என இத்தூதுக்குழுவினர், பொலிஸ் அதிபரிடம் தெரிவித்தனர். (வா. நி.)

## அடியார்களைத் தடுத்து கேள்விகள் கேட்பதா?

### இந்து மாமன்ற யாழ். கிளை கூட்டத்தில் வருத்தம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ்ப்பாணக்கிளையின் செயற்குழு நேற்று கூடியது. மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான சகல பிரச்னைகளும் ஆலோசிக்கப்பட்டன.

இவ்விஷயத்தை ஆலோசித்து தகுந்த நடவடிக்கை உடனே எடுக்கும்படி இந்து மாமன்றத் தலைவர் திரு. ஸ்ரீ ஸ்கந்தராஜாவையும், நிர்வாகசபையையும் கேட்டுக்கொள்வதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பொது தர்மச்சொத்தாகிய ஆலயங்களில் சைவ சமயத்திலுள்ளவர் எவரும் உட்சென்று சுவாமிதரிசனம் செய்ய உரிமையுண்டு என உயர்நீதிமன்றத்தினால் முடிவு செய்யப்பட்டபின்பும் தொண்டர்படை எனும் போர்வையில் ஆலயவாசல்களில் அடியார்களைத் தடை செய்து பல கேள்விகளைக் கேட்பது மிகவும் வருத்துதற்குரியது.

இறைவழிபாட்டுக்கு யாவருக்கும் சமஉரிமை வழங்குவதுதான் மேன்மையான சைவநீதியாகும் என இக்கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

## கடத்தப்பட்ட மாணவி கொலை?

### தாயார் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாடசாலைக்குச் சென்றபொழுது கடத்தப்பட்டதாகக் கருதப்படும் 16 வயது மாணவி கமலாம்பிகை கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று அவரது தாயார் கருதுவதாகத் தெரிகின்றது.

காணாமல் போன மாணவியின் தாயாரான திருமதி சரவணமுத்துப்பிள்ளை சாவகச்சேரிப் பொலிசாருக்குக் கொடுத்துள்ள வாக்குமூலத்தில், பாடசாலைக்குச் சென்ற [illegible] விக்கிலையென்றும் அவர் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று அஞ்சுவதாகவும் தெரிவித்துள்ளார். இதுசம்பந்தமாக மட்டுவிலைச்சேர்ந்த இருவர் மீது தமக்கு சந்தேகம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மட்டுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவரையும் இன்னொருவரையும் பொலிசார் இது சம்பந்தமாகத் தேடுகின்றனர்.

## புதிய ஆயுர்வேத டாக்டர்கள்

அல்லைப்பிட்டி, சனி

கொழும்பு சுதேச வைத்திய சபையினரால் யாழ்ப்பாணம் இலங்கை ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் சென்ற ஏப்ரல் மாதம் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாசகர்**

தெய்வமின்சாரத்தை மக்களிடைப் பாயச்செய்யும் கம்பி மதம். அக்கம்பி அச்ச முதலியவாம் தடை ஏறின், மக்களுக்குந் தெய்வத்துக்குந் தொடர்பு இல்லையாய்விடும்.

ரா. சு. நாவலர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

சாதிக்கசனம் கீலகவருஷம் ஆனி மாதம் 24-ந்திகதி
(7-7-68)

## மாவட்ட சபையும் 'மக்கள்' கருத்தும்

இந்த நாட்டின் மிகப் பெரும்பான்மையான மக்கள் தெட்டத் தெளிவாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளதால் மாவட்ட சபைகள் அமைக்கும் யோசனையை கைவிடுவதற்குப் பிரதமர் தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது, மற்றும் செய்திகளும பிரதமர் மக்களின் அபிப்பிராயத்துக்கு மதிப்புக்கொடுத்து மாவட்ட சபைகள் அமைப்பதற்கான மசோதாவை இப்போது கொண்டுவர மாட்டாரென்று கூறுகின்றன. இந்தச் செய்திகளின்படி உத்தேச மாவட்ட சபைகள் மசோதா கொண்டு வருவது கைவிடப்படும் அல்லது இன்னும் காலதாமதம் ஏற்படும். காலம் நீடிக்க நீடிக்க எதிர்ப்பும் அதிகரித்து அடுத்த தேர்தல் சமயமும் நெருங்கும். பெரும்பான்மையான மக்களின் எதிர்ப்பு காரணமாகவும் 'நெருக்குதல்' காரணமாகவும் அடுத்த தேர்தலைக் கருத்தில் கொண்டும் 'மாவட்ட சபைகள்' அமைக்கும் யோசனையே கைவிடப்படலாம்.

மாவட்ட சபைகள் யாருக்கு நன்மை, யாருக்குத் தீமை என்பதைப் பற்றியோ, மாவட்டசபைகள் அமைக்கப்பட்டால் நமது நாட்டின் சகல பிரச்சினைகளும் தீர்ந்துவிடுமா அல்லது புதிய பிரச்சினைகள் தோன்றுமா என்பதைப் பற்றியோ நாம் இங்கு இப்போது ஆராயவிரும்பவில்லை. மாவட்ட சபைகள் அமைப்பதற்கான மசோதா கொண்டுவரப்படுமா, இல்லையா என்பது தான் இன்றுள்ள முதல் முக்கிய பிரச்சினை. இன்று ஆட்சி மன்றத்தின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாகிறது. புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து கவர்னர் ஜெனரல் நிகழ்த்தவிருக்கும் சிம்மாசனப் பிரசங்கத்தில் இதுவரை அரசாங்கம் சாதித்தவைகளையும் இனி சாதிக்கவிருப்பவைகளையும் கவர்னர் ஜெனரல் தெரிவிப்பார். சிம்மாசனப் பிரசங்கம் அரசாங்கத்தின் ஒரு கொள்கை விளக்க அறிக்கைதான். இன்று நிகழ்த்தப்படும் சிம்மாசனப் பிரசங்கத்தில் 'மாவட்ட சபைகள் அமைக்க எனது அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்' என்றும் கவர்னர் ஜெனரல் தெரிவித்தால்கூட, ஆட்சிமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரில் மாவட்டசபை மசோதா கொண்டுவரப்படவேண்டிய கட்டாயமில்லை.

# "தமிழிலே விஞ்ஞானம் சுலபமாகப் போதிக்கலாம்"

## கொழும்பில் கவியோகி

வெள்ளவத்தை, சனி

"இலங்கையிலே நான் விஜயம் செய்த இந்துக் கல்லூரிகளில் மாணவர்கள் அழகாகத் தேவாரப்பண் இசைக்கிறார்கள். தமிழ்நாட்டிலே கூட இவ்வளவு அழகாகப் பண் இசைத்து மகிழும் மாணவர்களை நான் காணவில்லை. தமிழிலே விஞ்ஞானம் சுலபமாகப் போதிக்க முடியும். நான் விஞ்ஞானத் துறையில் ஈடுபாடுடையவன். முதன்முதல் நானே தமிழில் விஞ்ஞானத்தைப் படிப்பிக்க ஆரம்பித்தேன். உளநூலாராய்ச்சியிலே ஈடுபாடுடைய நான் பார்வையாலேயே மக்களைப் புரிந்து கொண்டு அவர்களுடைய நோய்க்கும் மருந்துசொல்வேன். தாயுமானவர் பற்றி 'வாய்ஸ் ஒவ் தாயுமானவர்' என்று நான் எழுதிய நூலை யாழ்ப்பாண நண்பர் திரு. சுப்பிரமணியம் என்பவரே வெளியிட்டு உதவினார். யாழ்ப்பாணத் தமிழர்களின் சமயப்பணியும் தமிழ்ப் பணியும் என்றும் மறக்கமுடியாதவைகள்."

இவ்வாறு கவியோகி சுவாமி ஸ்ரீ சுத்தானந்த பாரதி வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இந்துமாமன்றமும் ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தில் பேசுகையில் கூறினார். முன்னாள் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. சுத்தானந்த பாரதி தொடர்ந்து கூறியதாவது:

"அப்பரின் தேவாரத்தை நான் ரஷ்யாவில் மொழி பெயர்த்துப் பாடியபோது அனைவரும் ஆச்சரியப்பட்டனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதே பகவத்கீதையின் அடிப்படையாகும். மாஸ்கோவிலே கம்யூனிஸ்டுகள் மத்தியிலே எமது சமயம் ஏற்கனவே கூறிவைத்துள்ள பொதுவுடைமைக் கொள்கைகளையும் உலகரீதியான கண்ணோட்டத்தையும் எடுத்துக்கூறினேன். காக்கைக் குருவி எங்கள் சாதி; நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம் என்பதே தமிழரின் கொள்கை. 'யூனிசம்' என்ற ஒற்றுமை உலக மக்களிடையே ஏற்படவேண்டும். இவ்வாறு ஆத்மீக சோஷலிசம் பேசியபோது லெனின்கிராட்டிலும், மாஸ்கோவிலும் மக்கள் ஆமோதித்தார்கள்.

எப்போதும் புதுமைவேண்டும். பழைய நூல்களின் நல்லனவற்றை எடுத்துப் புதுமையோடு கலந்து கொடுக்கவேண்டும். தற்காலத்துக்கதைகள், கவிதைகள், கட்டுரைகளை நாம் போற்றவேண்டும். விஞ்ஞான ரீதியாக சமயத்தை ஆராயவேண்டும். அன்பில்லாமல் சமயம் இருக்கமுடியாது. அன்பும் சிவமும் ஒன்று.

## சுத்தானந்தர் உரை

அளவெட்டி, சனி

வேலணை வங்களாவடியில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் 8-ம் திகதி கவியோகி சுத்தானந்தபாரதியார் 'முருகன் பெருமை' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டசபைமசோதா கொண்டுவரத் தயங்குவது அல்லது கொண்டுவராமல்விடுவது 'பெரும்பான்மைமக்களின் பலத்த எதிர்ப்புக் காரணமாகத்தான்' என்பது தெளிவு.

மாவட்ட சபைகள் வேண்டாம் என்றால், இலங்கை சுதந்திரம் பெற்ற சமயத்திலிருந்தது போல் சிங்களமும் தமிழும் இந்நாட்டின் தேசிய மொழிகளாகவும் உத்தியோக மொழிகளாகவும் மீண்டும் ஆக்கப்பட்டு, இந்நாட்டிலுள்ள சிறுபான்மையினர் அச்சமின்றி சுதந்திரமாக வாழவும் சமூகங்களுக்கிடையில் பாகுபாடு காட்டப்படாமலும் சுதந்திரத்தின் பின் இயற்றப்பட்ட பாரபட்சமான சட்ட விதிகளை நீக்க அரசாங்கமும் பெரும்பான்மைச் சமூகத்தினரும் முன்வருவார்களா?

இன்று எழுந்துள்ள மாவட்டசபை பிரச்சினை தமிழ் சமூகத்தினருக்கு தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும். ஒன்றுமேயில்லாத மாவட்டசபைகளைப் பெறுவதற்கே இவ்வளவு கஷ்டம் ஏற்படுவதற்கு தமிழ்த் தலைவர்களிடையில் நிலவும் வேற்றுமைதான் முக்கிய காரணமென்பதை தமிழ்ச் சமூகம் உணரவேண்டும். இந்த சமயம் எந்த ஒரு கட்சியுடனும், தனிப்பட்ட தலைவர்களுடனும் பேரம் பேசி, ஒப்பந்தம் செய்தாலும் தமிழ் மக்களுக்கு பயன் கிடைக்கமாட்டாதென்பதையும் இந்நாட்டில் மற்றவர்களுடன் தமிழர் சரிநிகர் சமானமாக அமைதியாக வாழ வகைசெய்ய புதிய வழிகளைத் தேட வேண்டிய சமயம் வந்துவிட்டது.

## இன்றைய பலன்

(7 - 7 - 68)

ஆனி மீ 24 உ

ஞாயிற்றுக்கிழமை

திதி- துவாதசிபகல்4-22 மேல் திரயோதசி.

நட்சத்திரம்- அனுஷம் மாலை 5-53மேல் கேட்டை

ராகுகாலம் - 4-28 5-58

சுபநேரம்- 8-58— 10-28.

இன்று பிறந்தவர்களுக்கு குறைகேட்கநேரிடும் நாவடக்கம்நன்மைதரும். சொத்துவிவகாரத்தில் குழப்பநிலை தோன்றக்கூடும். உடன்பிறந்த ஒருவரால் மனக்கவலை அதிகரிக்கும். குடும்பஸ்தர்களின் வாழ்க்கையில் மனைவியின் ஆதரவு கிடைக்கும். பெண்களுக்கு இவ்வாண்டு ஒரு சோதனைக் காலமாகும்.

மேஷம்- பக்கத்திலே படு ழி. உஷாராகவிரு.

ரிஷபம்-களஸ்திரசுகம், கண்ணியம் சேரும்.

மிதுனம்-ஏமாற்றமிகுதி ஏக்கத்தின் சாயல்.

கடகம்- தெய்வ குரு பக்தி, தேடியது கிடைக்கும்.

சிம்மம்- பதவியில் உயர்வு, இருப்பிடமாற்றம்.

கன்னி- எண்ணம்போல் வாழ்வு, ஏற்றமுண்டு.

துலாம்- தனிவழிப் பயணத்தைத் தவிர்த்து விடு இன்று

விருச்சிகம்- அடிசறுக்கும், ஆணவத்தை அடக்கு.

தனுசு- தனச் சிறப்பு, தாணியவிருத்தி.

மகரம்- எண்ணியதில் தடை, இனத்தில் பூசல்.

கும்பம்- வாகனவிருத்தி வாழ்விலும் திருப்தி.

மீனம்- புத்திர சுகம். புதியபாதை.

— சோதிடக் கலாநிதி —

திருமதி வேலுப்பிள்ளை

## 'திருவாசகம் ஒருதவ நூல்'

ஊர்காவற்றுறை, சனி

"திருவாசகம் சைவமக்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு தவ நூலாகும். சமயத்தை வளர்க்க வேண்டுமானால் நாம் உலக இன்பங்களை எல்லாம் வெறுத்துத் துறவறம் பூணவேண்டுமென்பதில்லை. மனத்திலுள்ள தூய்மையான எண்ணத்துடன் ஆண்டவனை வழிபட்டால் போதுமானது" என கொழும்புத்துறை ஆசிரியகலாசாலை இந்து மாணவர் மன்றத்தினரால் நடாத்தப்பெற்ற மணிவாசகர் குருபூசை விழாவில் உரை நிகழ்த்திய பண்டிதை செல்வி பாக்கியம் நாகமுத்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கலாசாலை அதிபர் திரு. எஸ். கிசுவலிங்கம் விழாவுக்குத் தலைமைவகித்தார்.

## இன்று சொற்பொழிவு

கரவெட்டி, ஞாயிறு

கரவெட்டி தச்சந்தோப்பு விநாயகர் ஆலயத்தில் இன்று மாலை காரைக்குடி சா. கணேசன் 'திருவாசகத்தேன்' என்னும் பொருள் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

(5ம் கலத் தொடர்ச்சி)

நாடுகளில் கலந்துகொண்டுவிட்டு, பின்னர் ஸ்விட்சர்லந்துக்கும், டென்மார்க், ஜெர்மனிவழியாக நார்வேக்கும் சென்று ஆஸ்லோவில் அக்டோபரில் நடைபெறும் மகாத்மாகாந்தி நூற்றாண்டு ஜயந்தி விழாவில் கலந்துகொள்வார், பின்னர், ரோம புதுடில்லி சென்னை வழியாக இலங்கை திரும்புவாரென்று தெரிகிறது.

ஃ ஃ ஃ

வீடு பிறப்பை யறுத்து
மெச்சினார்
பிடை கெடுப்பன பின்னை
நாடொறும்
மாடு கொடுப்பன மன்னு
மாநடம்
ஆடியுகப்பன அஞ்செழுத்
தமே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

## ஐயாறன் எழுதுவது

சென்ற வெள்ளிக்கிழமை அதிகாலை வண்ணை சிவன் கோவிலில் சுமார் 50 குழந்தைகளுக்குமேல் பஜனை செய்து கொண்டு ஒழுங்காக அமர்ந்திருந்தனர். வெளிவீதியிலே பஜனை செய்து வந்த அவர்களுக்கு கோவிலில் இலவசமாக தேநீர் கொடுத்ததை அக்குழந்தைகள் ஆவலுடன் பருகினர். அந்த கோவில் 'பிரசாதம்' தான் அவ்வளவு குழந்தைகள் அதிகாலையில் எழுந்து பஜனை செய்து கோவிலுக்கு வந்ததற்குக் காரணமாகும். இல்லாவிட்டால் வருவார்களா?

சில ஊர்களிலே கோவில்களுக்கு மக்கள் வருவதில்லை என்று புகார் உண்டு. அவ்வப்போது நல்ல பிரசாதங்கள் போட்டுக்கொடுப்பதாயின், மத வேற்றுமையின்றி பலரும் வருவர். இப்படி இலவசமாக தெய்வத்தின் பெயரால் உணவு வழங்குவதே ஒரு நல்ல தர்மமாகும். இந்த தர்மத்தை அந்நிய ஆட்சியிலே நாம் மறந்து விட்டோம். இதை மீண்டும் செய்ய ஆரம்பித்தால், மக்களிடை அன்பும் ஒற்றுமையும் வளரும். தேசியஒருமைப்பாடு வலுப்படும்.

கோவிலைப் புறக்கணித்து விட்டு, தேசிய ஒருமைப்பாடென்று கரடியாக இந்நாளில் கத்திப்பார்க்கிறார்கள். இது முடியுமா? வகுப்பு வாதத்தை எதிர்க்கக்கடும் தண்டனை விதிக்கப்போகிறார்களாம். ஆனால் ஆக்க முறையிலே கோவில் முதலிய வழிபடும் ஸ்தலங்கள் மூலம் செய்யும் அன்புப் பணிகளும் தர்மமுமே மக்களிடை ஒற்றுமையைவளர்க்க முடியுமென்பதை உணருவாரில்லை. 'மதச்சார்பற்றது' என்ற பெயரால் மதத்தையே பகிஷ்கரித்துஎல்லா சமூக சேவைகளையும் ராசாங்கமே செய்யவேண்டுமென்றால் அது முடியுமா? சம்பள அடிமைகளான அரசாங்க அதிகாரிகளுக்கு பொது மக்கள்பால் அன்பும் அபிமானமும் எப்படி ஏற்படமுடியும்?

ஃ ஃ ஃ

'ஆத்மஜோதி', 'ரிலிஜியஸ் டைஜஸ்ட்' (சமயமஞ்சரி) ஆசிரியரான பெரியார் கே. ராமச்சந்திரா அவர்கள், அடுத்தவாரம் ஜெருஸலேமுக்குப் புறப்படுச் செல்கிறார். அங்குள்ள ஹீப்ரு சர்வகலாசாலையிலே சர்வதேச சமய வரலாற்றுச்சங்கத்தின் ஆதரவில் ஓர் உலக மகாநாடு இம்மாதம் 14-ந் திகதி கூடுகிறது ஒரு வாரகாலம் நடைபெறும் அம்மகாநாட்டில் திரு. கே. ஆர்., சர்வகலாசாலையின் விருந்தினராகத் தங்கியிருப்பார்.

சமயங்களின் பெயரால் மக்களிடை வெறியை வளர்த்து, எவ்வளவோ யுத்தங்கள் நடைபெற்று எத்தனையோ உயிர்களுக்குச்சேதமேற்பட்டுள்ளனவென்பதற்கு சரித்திரச் சான்றுகள் அநேகமுண்டு. நாகரீகம் வளர்ந்தும் இந்த மதவெறி எண்ணங்கள் குறையவில்லை. இந்த வெறிகளை நீக்கவும், பல மதஸ்தாபனங்களுக்கிடையிலே சமூக சேவைக்கான ஒத்துழைப்பு ஏற்படவும், இந்த மகாநாடு ஏதாவது வழிசெய்யுமாயின் அதுவும் வரவேற்கத்தக்கதே. இல்லாவிடில் எல்லாமதங்களையும் ஒழித்துவிடக்கூடிய ஆபத்துதான் ஏற்படுவதாக இருக்கும்

ஃ ஃ ஃ

திரு. இராமச்சந்திரா ஜெருஸலேமிலிருந்து பிரிட்டனில் நான்கு சமய மகா

(4ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிஸ் வியட்னும் பேச்சுக் கெடுபிடி தளர்த்த

## யூ தாண்ட் முயற்சி

## பிரெஞ்சு வெளியுறவு மந்திரி அழைப்பில் ஒரு நாள் விஜயம்

ஜெனீவா, ஜூலை 6

**ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் செய்துவரும் ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட், இன்று ஜெனீவாவிலிருந்து பாரிஸ் செல்லவிருக்கிறார். பிரெஞ்சு வெளியுறவு மந்திரி திரு. டெப்ரேயின் அழைப்பை ஏற்றே அவர் அங்குசெல்கிறார்.**

பாரிஸ் செல்லும் யூ தாண்ட, வியட்னும் சமாதானம் சம்பந்தமாக அங்கு பேச்சுவார்த்தைகளை நடத்திவரும் அமெரிக்க, வட வியட்னும் பிரதிநிதிகள் கோஷ்டிகளுக்குமிடையேயான கெடுபிடியைத் தளர்த்த முயற்சி செய்வாரெனக் கூறப்படுகிறது.

இச் சம்பந்தமாக, பாரிஸிலுள்ள வட வியட்னும் பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவர் திரு. ஸுவான் தியூவை அவர் சந்தித்துப் பேசலாம் எனவும் கருதப்படுகிறது.

### ஹரிமனை சந்திக்கும் திட்டமில்லை

ஜெனீவாவில் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் பாரிஸில் அமெரிக்கப் பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவர் திரு. அவரெல் ஹரிமனைச் சந்திக்கும் திட்டம் தமக்கில்லை என்று யூ தாண்ட் தெரிவித்தார்.

### பிரெஞ்சு வெளியுறவு மந்திரியுடன்

பிரெஞ்சு வெளியுறவு மந்திரி திரு. டெப்ரேயுடன் யூ தாண்ட் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில், அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் அணு ஆயுதக் குறைப்பு மகாநாடு மேற்கு ஆசியப் பிரச்சினை, கிழக்கு - மேற்கு உறவுகள் ஆகிய விடயங்கள் முக்கிய இடம் பெறுமெனத் தெரிகிறது.

தமது பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட் இன்று மாலை பாரிஸிலிருந்து ஜெனீவா திரும்ப இருக்கிறார்.

# மலேஷிய உள்விவகாரங்களில் சீனு குறுக்கிடுகிறது

## மலேஷிய குற்றச்சாட்டு

கோலாலம்பூர், ஜூலை 6

மலேஷியாவின் உள்விவகாரங்களில் சீனு குறுக்கிடுவதாக மலேஷிய துணைப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஸாக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தாய்லாந்து — மலேஷிய எல்லையில் கொரில்லாப் படைகளுக்குப் பயிற்சியளிக்கவும், தலைமை தாங்கவும் சீன ஜெனரல் ஒருவரை சீனு நியமித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த செய்தியொன்று பற்றிக் குறிப்பிடுகையிலேயே திரு. ரஸாக் இவ்விதம் கூறினார்.

மலேஷிய கம்யூனிஸ்ட் கட்சி சீனுவின் கட்டுப்பாட்டுக்குக் கீழுள்ளது என்பதை இது சுட்டிக்காட்டுவதாகவும் திரு. ரஸாக் கூறினார்.

தாய்லாந்தும், மலேஷியாவும் இப்போது தமது எல்லைகளைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன.



### ஷேர்ஹானை பரிசோதிக்க இந்திய நிபுணர்

ஜெய்ப்பூர், ஜூலை 6

ரொபேர்ட் கென்னடியை சுட்டவரெனக் கருதப்படும் ஷேர்ஹானை பரிசோதிப்பதற்கு பிரபல இந்திய மனத்தத்துவ நிபுணர் டாக்டர் ஹரேந்திரநாத்பானர்ஜி விரைவில் அமெரிக்கா செல்வார்.

ஷேர்ஹான் டாக்டர்பானர்ஜியைத் தவிர வேறு எவரிடமும் பேசுவதில்லையென்று தெரிவித்தபடி, வாக்கு அவரை தருவிப்பதாக அமெரிக்கப் பொலிசார் கூறினர்.

டாக்டர் பானர்ஜி மனோவசியத்தையும் யோகமுறைகளையும் கையாண்டு ஷேர்ஹானை பரிசோதிப்பார்.

கிறீன்லாந்தில்

# அமெரிக்க ரொக்கெட் பரிசோதனைகள்

## டென்மார்க் தடை

கொப்பான்ஹேகன், ஜூலை 6

கிறீன்லாந்தில் ரொக்கெட் பரிசோதனைகளை அமெரிக்கா நடத்துவதுமீது டென்மார்க் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

கடந்த வருடம் கிறீன்லாந்தில் ஜலவாயுக் குண்டுகளுடனன அமெரிக்க விமானமொன்று விழுந்து நொறுங்கியதை அடுத்து, தமது நாட்டு மக்கள் அடைந்துள்ள பீதி காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக டென்மார்க் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தனது முடிவை வேண்டுமானல் அடுத்த வருடம் புனராலோசனை செய்யலாம் எனவும் அது தெரிவித்திருக்கிறது.

### ரஷ்யா, வடவியட்னும் உடன்படிக்கை

மாஸ்கோ, ஜூலை 6

ரஷ்யாவும், வடவியட்னுமும் தொழில் நுட்ப, விஞ்ஞான, கலாச்சார ஒப்பந்தமொன்றை இங்கு கைச்சாத்திட்டுள்ளன.

இரு நாடுகளும் தமக்கிடையே இராணுவ ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து இப்போது இந்தக் கலாச்சார ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கெய்ஸானிலிருந்து

### அமெரிக்க துருப்புகள் வெளியேற்றம்

சைகோன், ஜூலை 6

தென்வியட்னுமிலுள்ள கெய்ஸான் தளத்திலிருந்து, அமெரிக்கத் துருப்புகள் வெளியேறிவிட்டன. தளத்தைவிட்டு வெளியேற முன்னர் அவை அதை நிர்மூலமாக்கின.

துருப்புகளை ஓரிடத்தில் வைத்திருப்பதற்குப் பதிலாக, அவற்றைத் துரிதமாக அங்குமிங்கும் இயங்கும் வண்ணம் செய்வதற்காகவே, இத்துருப்புகளின் வெளியேற்றம் நடைபெற்றுள்ளது.

இவ்வருட முற்பகுதியில் கெய்ஸான் தளம், வடவியட்னும், வியட்கொங் படைகளினுல் சுமார் ஒன்றரை மாத காலம் முற்றுகையிடப்பட்டிருந்ததை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

# பட்டினியால்பாதிக்கப்பட்டுள்ள நைஜீரிய அகதிகள்

## உதவியளிக்கச் செல்லும் பிரிட்டிஷ் தூதுகோஷ்டி

லண்டன், ஜூலை 6

நைஜீரிய உள்நாட்டுப் போரின் விளைவாக், பிரிவினை 'பியாவ்ரா'வான கிழக்கு நைஜீரியாவில் பட்டினியால் மரணமடையும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளிக்கும் முகமாக, ஹண்ட் பிரபுவின் தலைமையிலான பிரிட்டிஷ் தூதுகோஷ்டி ஒன்று இன்று இங்கிருந்து லாவோஸ் புறப்பட்டது.

பியாவ்ராவில், அகதிக் குழந்தைகளின் நாளாந்த மரணவிகிதம் 3000 என அறிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரிய உள்நாட்டுப் போரினுல் வெகுதும் பாதிக்கப்பட்டுள்ள இந்த அகதி மக்களுக்கு நிவாரணமளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள, பிரிட்டிஷ் அரசாங்கம் சமஷ்டி நைஜீரிய அரசாங்கத்தின் முன் அனுமதி பெற வேண்டுமெனப் பல பிரிட்டிஷ் உதவி நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளன. இதுசம்பந்தமாகப் பல கடிதங்கள் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இதற்கிடையில், பியாவ்ராவுக்கு உத்தரவின்றி நிவாரணப் பொருட்கள் எவற்றையும் கொண்டுசெல்லும் விமானம் சுடப்படும் எனச் சமஷ்டி நைஜீரிய அரசாங்கம் எச்சரித்துள்ளது.

# வட அத்லாந்திக் சமுத்திரத்தில் வார்ஸோ நாடுகள் கடற்பயிற்சி

## முதற் தடவையாக நடைபெறவிருக்கிறது

மாஸ்கோ, ஜூலை 6

முதற்தடவையாக, வார்ஸோ ஒப்பந்த நாடுகள் வட அத்லாந்திக் கடலில் கடற்படைப் பயிற்சிகள் நடத்தவிருக்கின்றன. இதுபற்றிய அறிவிப்பு, மாஸ்கோவில் வெளியிடப்பட்டுள்ளது.

வடஅத்லாந்திக் சமுத்திரத்திலும் பால்டிக் கடலிலும் நடக்கவிருக்கும் இக் கடற்படைப் பயிற்சி அணிவகுப்புகளில் ரஷ்ய, போலந்து, கிழக்கு ஜெர்மன் கப்பல்கள் பங்குபற்றுமெனவும் அறிவிக்கப்பட்டது.

### சியரா லியோனில் பாதுகாப்பு நடவடிக்கை

பிரீடவுண், ஜூலை 6

சியரா லியோனில், எல்லா உள்ளூர் விமானப் போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டுள்ளது.

அந்நிய கூலிப்பட்டாளங்கள் நாட்டின் மீது படையெடுக்கும் ஆபத்து இருப்பதாக நாட்டின் பிரதமர் எச்சரிக்கை விடுத்ததைதொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# சமாதானத்தையே ஐ. அ. கு. விரும்புவதாக ஜனதிபதி நாஸர் அறிவிப்பு

## இழந்த பிராந்தியங்களை மீட்பதே அரபு மக்கள் அறுதிலட்சியம்

### ரஷ்ய உதவி பற்றி பிரெஷ்னெவ் வலியுறுத்தல்

மாஸ்கோ, ஜூலை 6

ரஷ்யாவுக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாஸர் ரஷ்ய உயர் தலைவர்களுடன் தமது பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தி வருகிறார். நேற்று, அவர், கிரெம்ளின் மாளிகையில், ரஷ்யத் தலைவர்களுடன் நீண்ட நேரம் ஆலோசனைகள் நடத்தினர்.

ரஷ்ய உயர் தலைவர்கள் ஜனதிபதி நாஸருக்கு அளித்த மதிய போசன விருந்துபசாரமொன்றில் பேசுகையில், சமாதானத்தையே ஐ. அ. கு. விரும்புவதாக அவர் கூறினர் ஆனல், [illegible] அரபு மக்களின் அறுதிலட்சியம் என்பதை நாஸர் மீண்டும் வலியுறுத்தினர். இஸ்ரேலின் கைவசமுள்ள அரபுப் பிராந்தியங்களை அரபு நாடுகள் மீட்டே தீரும் என்றார் அவர்.

ஏகாதிபத்திய வாதத்தையும், காலனித்துவ வாதத்தையும் இஸ்ரேல் ஆதரிப்பதாக நாஸர் தமது பேச்சில் குற்றஞ் சாட்டினர்.

### பிரெஷ்னெவ் உறுதி

ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு. பிரெஷ்னெவ் பேசுகையில், ஐ. அ. கு. வுக்கு ரஷ்யா தொடர்ந்து உதவியளிக்குமென்றும், இரு நாடுகளுக்குமிடையேயான நட்புறவு நீடிக்குமெனவும வலியுறுத்தினர்.

இஸ்ரேலைப்பற்றியுள்ள அரபுப் பிராந்தியங்களை மீட்பதில், ரஷ்யாவும் ஐ. அ. கு. வும் இணைந்து நிற்குமெனவும் திரு. பிரெஷ்னெவ் கூறினர்.

### பெல்கிரேட் விஜயம் ஒத்திவைப்பு

ரஷ்யத் தலைவர்களுடன் மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கென, ஜனதிபதி நாஸர், தமது பெல்கிரேட் விஜயத்தைச் சில தினங்களுக்கு ஒத்திப் போட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாஸ்கோ அருகேயுள்ள கிராமப்புற வாசஸ்தலமொன்றில் அவர் இப்பேச்சுவார்த்தைகளை நடத்துவார் எனவும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரவட்டார எல்லைகள் விபரம்

## 13, 14, 15-ம் வட்டாரங்கள்

### 13— வட்டாரம் (சுண்டிக்குளி)

வடக்கு: இராசாவின் தோட்டம் வீதியினதும் நாவலர் வீதியினதும் சந்தியின் மத்தியிலிருந்து கிழக்கு நோக்கி நாவலர் வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் கச்சேரி நல்லூர் வீதியுடனான சந்தியின் மத்திக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தென் மேற்கு நோக்கி 10-ம் வட்டாரத்தின் மேற்கு எல்லையின் ஓரமாகச் சொல்லப்பட்ட எல்லையினது கண்டி வீதியுடனான சந்தியின் மத்திக்கும், அங்கிருந்து கிழக்கு நோக்கி கண்டி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியினது காட்டுக்கந்தோர் ஒழுங்கையுடனான சந்தியின் மத்தியைச் சந்திக்கும் வரையும் அங்கிருந்து தெற்கு நோக்கி காட்டுக்கந்தோர் ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாகச் சொல்லப்பட்ட ஒழுங்கையினது கொழும்புத்துறை வீதியுடனான சந்தியின் மத்தியைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கி கொழும்புத்துறை வீதியின் மத்திய கோட்டின் ஓரமாகச் சொல்லப்பட்ட வீதியினது கோவில் வீதியுடனான சந்தியின் மத்திக்கும வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி கோவில் வீதியின் மத்திய கோட்டின் ஓரமாகச் சொல்லப்பட்ட வீதியினது ஆஸ்பத்திரி வீதியுடனான சந்தியின் மத்திக்கும், அங்கிருந்து மேற்கு நோக்கி ஆஸ்பத்திரி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியினது இராசாவின் தோட்டம் வீதியுடனான சந்தியின் மத்திக்கும், அங்கிருந்து வடக்கு நோக்கி இராசாவின் தோட்டம் வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக 13-ம் வட்டாரத்தின் வட எல்லை தொடங்கும் இடத்தைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

### 14-ம் வட்டாரம் (நீராவியடி)

வடக்கு: பருத்தித்துறை வீதியினதும் நாவலர் வீதியினதும் சந்தியின் மத்தியிலிருந்து கிழக்கு நோக்கி நாவலர் வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் இராசாவின் தோட்டம் வீதியுடனான சந்தியின் மத்திக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி இராசாவின் தோட்டம் வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் ஆஸ்பத்திரி வீதியுடனான சந்தியின் மத்திக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்துமேற்கு நோக்கி ஆஸ்பத்திரி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் மூன்றும் குறுக்குத் தெருவின் மத்திய கோட்டின் ஓரமாக மூன்றும் குறுக்குத் தெருவினதும், நாலாம் குறுக்குத்தெருவினதும் சந்தியின் மத்திக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி நாலாம் குறுக்குத்தெருவின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் வேம்படி வீதியுடனான சந்தியின் மத்திக்கும், அங்கிருந்து மேற்குநோக்கி வேம்படி வீதியுடனான சந்தியின் மத்திக்கும், அங்கிருந்து மேற்கு நோக்கி வேம்படி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக வேம்படி வீதியினதும் பருத்தித்துறை வீதியினதும் சந்தியின் மத்திக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி பருத்தித்துறை வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக 14-ம் வட்டாரத்தின் வட எல்லை தொடங்கும் இடத்திற்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

### 15-ம் வட்டாரம் (கைலாசபிள்ளையார்)

வடக்கு: பலாலி வீதியினதும் திருநெல்வேலி வீதியினதும் சந்தியின் மத்தியிலிருந்து கிழக்கு நோக்கிச் சொல்லப்பட்ட திருநெல்வேலி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் கோயில் வீதியுடனான சந்தியின் மத்திக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி 12-ம் வட்டாரத்தின் மேற்கெல்லைகளின்ஓரமாக அதன் தென்னந்தத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்குநோக்கி நாவலர் வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் பலாலி வீதியுடனான சந்தியின் மத்திக்குப் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி பலாலி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக 15-ம் வட்டாரத்தின் வடஎல்லை தொடங்கும் இடத்துக்கு வரைப்பட்ட ஒரு கோட்டினால்.

## வாகனப் போக்குவரத்து அறிவித்தல்

### 1968-ல் நடைபெறும் நல்லூர் கந்தசுவாமிகோவிலின் வருடாந்த உற்சவவிழா

மேற்படி விழாவின் பொருட்டாக 30-7-68 தொடக்கம் 24-8-68 வரை உட்பட்ட நாட்களிலும் கீழ்க்கண்ட வீதிகளில் யாவும் சகலவித வாகனப் போக்குவரத்துக்களுக்கும் மூடப்பட்டிருக்கும்.

1. அரசடிச் சந்திக்கும் இரண்டாவது மைல்கல்லுக்கும் இடையில் உள்ள பருத்தித்துறை வீதியின் அந்தப் பகுதி.

2. பண்டாரக்குளம் ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையில் உள்ள கோயில் வீதியின் அந்தப்பகுதி.

3. பருத்தித்துறை வீதிக்கும் செட்டி ஒழுங்கைக்கும் இடையில் உள்ள செட்டித்தெருவின் அந்தப்பகுதி.

வாகனப் போக்கு வரத்துக்கு மூடப்பட்டிருக்கும் எல்லைக்குள் வசிப்பவருக்கும் அரசாங்கக் கடமையின் நிமித்தம் செல்லவேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் கோவில் வளவில் நிறுவப்பட்டிருக்கும் தற்காலிகப் பொலிஸ் நிலையத்தில் 29-7-68 பிற்பகல் தொடக்கம் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

#### வாகனங்கள் பிரிந்து செல்லல்

வாகனப்போக்குவரத்துக்களின்சாரதிகள் கீழ்க்காணும் பாதைகளில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

1. யாழ்ப்பாணத் திசையிலிருந்து கோப்பாய் நோக்கிப் போகும்போது (அல்லது எதிர்த்திசையில்) நாவலர் வீதி, நல்லூர் குறுக்கு வீதி முதலியவற்றுல் செல்லுதல் வேண்டும்.

2. அரசடி வீதிவழியாக கோப்பாய் நோக்கிப் போகும் பொழுது (அல்லது எதிர்த்திசையில்) வைமன் வீதி, நாவலர் வீதி, நல்லூர் குறுக்குத்தெரு முதலியவற்றுல் செல்லுதல் வேண்டும்

#### வாகனங்களை நிற்பாட்டிவைத்தல்

வழிபடுவோரின் வசதியை உத்தேசித்து வாகனங்களை நிற்பாட்டி வைப்பதற்கென மூன்று இடங்கள் ஒதுக்கி வைக்கப்படும். மேலும் இவ்விடங்களை நன்கு பாவிக்குமாறு சாரதிகள் அனைவரும் வேண்டப்படுகின்றனர்.

#### மேற்படி இடங்களாவன

1. அரசடி வீதி வழியாக கந்தசாமிகோவிலுக்கு வரும் வாகனங்களை அம்மன் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.

2. தென்பகுதியிலிருந்து கோவிலுக்குவரும் வாகனங்களை கைலாசபிள்ளையார் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.

3. கோப்பாய்த் திசையிலிருந்து கோவிலுக்குவரும் வாகனங்களை முத்திரைச்சந்தை மைதானத்தில் நிற்பாட்டலாம்.

பொலிஸ் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
4-7-68

எஸ். ஐ. ஆசீஸ்,
உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம். (1)

## "அலங்கார ஆடையில் மாத்திரம் நாகரீகம் தங்கியிருக்கவில்லை"

### மகளிர் பாடசாலை பரிசளிப்பு விழாவில் பேச்சு

உடுவில், சனி

"மாணவ மாணவிகள் ஆடையிலும் அலங்காரத்திலும் தான் நாகரீகம் தங்கியிருக்கிறது என எண்ணுகிறார்கள். உண்மையான நாகரீகம் அறிவு வளர்ச்சியில் தான் தங்கிருக்கின்றது ஆங்கிலேயர்களின் உடைகளையும் அலங்காரங்களையும் கைக்கொள்ள முன்வருகிறவர்கள் ஆங்கில அறிவை மட்டும் பெற்றுக்கொள்ள ஏன் பின்னிற்க வேண்டும்".

மானிப்பாய் இந்து மகளிர் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய சிற்ப ஓவிய வல்லுனர் திரு வி. எஸ். துரைராசா மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாய் இந்து மகளிர் பாடசாலை அதிபர் செல்வி ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில் திரு. வி. எஸ். துரைராசா மேலும் பேசியதாவது:

இஸ்ரேல் போன்ற நாகரீகமும், விஞ்ஞானமும் வளர்ச்சியடைந்த நாடுகளில் பெண்கள் ஆடைக் குறைப்பு செய்து முன்னேறவில்லை. கழுத்து முதல் பாதம் வரை போர்க்கப்பட்ட உடை உடுத்த பெண்கள் தான் விமானப் பணிப் பெண்களாக கடமை புரிகின்றனர். அவர்களை பின்பற்றி நாமும் எமது பழக்க வழக்க பண்பாடுகளை ஏன் பாதுகாத்துக்கொள்ளக் கூடாது? பெண்கள் இது விஷயத்தில் கூடிய சிரத்தை எடுத்து தாய்க்குலத்தின் பெருமையை பேணிக் காக்க முன்வர வேண்டும் என்றார்.

திருமதி வி. எஸ். துரைராசா வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

இப்போட்டிகளில் கம்பர் இல்லம் 117 புள்ளிகளைப் பெற்று இவ்வருடச் சாம்பியனுகியது. ஜமுனு இல்லம் 112 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் காவேரி இல்லம் 101 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன.

## "யாழ்ப்பாணத் தமிழர் உழைப்பாளிகள்"

### இஸ்ரேலியர் கருத்து

திருக்கோணமலை, சனி

இஸ்ரேல் தேசத்தவரான மோஷி ஒபட்டான் என்பவரும் அவருடைய நண்பர் ஒருவரும் திருக்கோணமலையில் வந்து தங்கி நின்றனர், இஸ்ரேல் தேசத்தில் கூட்டுப்பண்ணை தொழிலில் ஈடுபட்டிருந்த இவ்விருவரும் இலங்கைத் தீவின் இயற்கை வளப்பையும் எழில்மிகு துறைமுகங்களையும் இங்குள்ள மக்களின் பெருந்தன்மையையும் தாங்கள் கண்டுணர்ந்து ரசித்ததாகக் கூறினர். சில கேள்விகளுக்கு இவர்கள் பதிலளிக்கையில் இலங்கையில் யாழ்ப்பாணத் தமிழரே சிறந்தவரென்றும் அவர்கள் சிறந்த ஒரு உழைப்பாளிகளென்றும் மற்றவர்கள் குஷியான வாழ்வை நாடுபவர்களாக இருப்பதாகவும் கூறினர்.

## 'மாணவர் பொறுப்பு ஆசிரியரது மட்டுமல்ல'

அளவெட்டி, சனி

"மாணவர்களின் கல்விப் பொறுப்பை ஆசிரியர்களிடம் மட்டும் ஒப்படைக்கலாகாது. பெற்றோரும் அவர்களது கல்வியைக் கவனித்தால்தான் கல்விக் குழப்ப நிலை மாறும்" என்று காங்கேசன்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. சிமாம்பிள்ளை வீமன்காமம் மகா வித்தியாலய பெற்றோர்தின விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

வித்தியாலய மண்டபத்தில் அதிபர் க. ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிமாம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில், மாணவர்கள் தற்போது ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துவதில்லை. வீட்டிலே பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நல்ல பழக்கங்களை சிறு வயதிலிருந்து பழக்கி பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினால் ஆசிரியர்களுக்கும் சலிப்பில்லை. பிள்ளையும் கல்வியில் முன்னேறும் என்றார். பண்டிதர் இ. நமசிவாயகம் நன்றியுரை கூறினார்.

## அரசாங்க உதவி வேண்டும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"சில குறிப்பான நோக்கங்களை நிறை வேற்றுவதற்காகவே கூட்டுறவு நிறுவனம் கடமையாற்றுகின்றன. கூட்டுறவு நிறுவனத்தின் திறமையும் பிரயோசனமும் அது இவைது அங்கத்தினருக்குப் புரியும் சேவையிலிருந்தே கணிக்கப்படுகின்றது. கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்த மேன்மேலும் அரசாங்கம் உதவி புரிய வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவு சங்க சமாஜத்தில் நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும் போது திரு. ஏ. வே இராசதுரை சிங்கம் கூறினார் (ந. நி)

## ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கீரிமலையில் இருந்து காலை 6-55 மணிக்கு காங்கேசன்துறை வீதிவழியாக கொடிகாமம் செல்லும் பஸ்சேவை நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து இலங்கைத் தமிழரசுக்கட்சி தெல்லிப்பழைக் கிளைச் செயலாளர், இ. போ. ச. முகாமையாளருக்கும் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்துக்கும் கடிதமொன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

## மாணவன் எங்கே?

உடுவில், சனி

பாடசாலைக்கு சென்ற மாணவன் வீடு திரும்பவில்லை என்று சுன்னாகம் பொலிசில் புகார்செய்யப் பட்டுள்ளது. சுன்னாகம் [illegible] இவர் குப்பிளானை சேர்ந்தவராம்.

## விவசாய கடன்

கொழும்பு, சனி

கூட்டுறவு இலாகா மக்கள் வங்கி ஆகியவற்றில் சென்ற வருடத்தில் அறுவடைக்காக விவசாயிகள் சுமார் 61,000,000 ரூபாவை கடனுகப் பெற்றுள்ளனர். 25,000,000 ரூபா கடன் மக்கள் வங்கியில் திருப்பிச் செலுத்தப்படுள்ளது. பொலனறுவை விவசாயிகளில் 85 வீதத்தினர் கடனை திருப்பிக் கொடுத்து கடன் செலுத்துபவர்களில் முன்னணியில் நிற்கின்றனர் எனத்தெரிகிறது.

## உப-தபால் அதிபர் மகாநாடு

உடுவில், சனி

அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் சம்மேளனத்தின் 6-வது வருடாந்த மகாநாடு இம் மாதம் 17-ம் திகதி தபால் தந்திக்கந்தோர் 7-வது மாடியில் நடைபெற இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தவரோதய கல்லூரி சுன்னாகம்

## பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் நினைவுவிழாவும்

9-7-1968

பிரதம விருந்தினர்கள்:

டாக்டர் ஜி. பி. மலலசேகராவும்

(தேசிய உயர் கல்விச் சபைத்தலைவர்)

பாரியாரும்

திரு. கு. பாலசிங்கம்

(நிரந்தரக் காரியதரிசி-சுகாதார அமைச்சு)

ஸ்தாபகர் நினைவுரை நிகழ்த்துவார்கள்.

பெற்றோர், பழைய மாணவர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர்.

குறிப்பு: 10-7-68-ல் நிகழவிருந்த இவ்விழா 9-7-68க்கு முற்போடப்பட்டுள்ளது. 730


## யாழ் - வின்ஸர் திரையில்

இப்பொழுது திரையிடப்படுகிறது!



ஜெய்சங்கர்,
ஜெயலலிதா,
M. N. நம்பியார்,
புஷ்பலதா
ஜெயபாரதி,
ஸ்ரீகாந்த்,
ராகவன்,
எஸ். பாக்கியம்
நடித்த

ராஜா வீட்டுப் பிள்ளை



லிங்ஸ்லி | பிளாசா | மைலன்
--- | --- | ---


வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | விஜயா [மட்டக்களப்பு] | ராஜ் [நீர்கொழும்பு]

ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [அட்டன்] | அயன் [மன்னார்]

★ ஜெமினி கணேசன்

★ கே. ஆர். விஜயா

நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் ராமு


## அகில இலங்கைத் தமிழ் நாடகப் போட்டி

இடம்: எளுதுமட்டுவாள் நடேசர் தமிழ்மன்ற அரங்கு.

காலம்: 21-8-68.

பரிசுகள்: தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெள்ளிக்கிண்ணம், சான்றிதழ்கள், மற்றும் விசேட பரிசுகளும்.

நேரம்: 45 நிமிஷம்.

விண்ணப்பக் கடைசித் திகதி: 20-7-68.

விண்ணப்பப்பத்திரங்கள், போட்டி விதிகள் மற்றும் விபரங்களுக்கு:- நா. சுப்பிரமணியம், பிரதம செயலாளர், நடேசர் தமிழ் மன்றம், எளுதுமட்டுவாள். 864

## கிராமச்சபை வேலணை கேள்வி அறிவித்தல்

வேலை விபரம்

2-ம் வட்டாரம்

வாசிகசாலை ஒழுங்கை

வேலணை கிராமசபை அக்கிராசனரால் மேற்குறிப்பிட்ட வேலை செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் 1968ம் ஆண்டு ஆடிமாதம் 20-ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி வரையும் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 19-7-68ம் திகதி பிற்பகல் 2-00 மணிவரையும் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 50/-ம் பத்திரப்பணம் ரூபா 5/-ம் கட்டியதன்பேரில் உத்தியோகபூர்வமான பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக் காரர்கட்கு வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கிராமச்சபை காரியாலயத்திலும் வடபகுதி உதவி உள்ளூராட்சி அதிபரின் காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

பு. சுப்பிரமணியம்
தலைவர்
கிராமச்சபை, வேலணை.
866

## இரு தியேட்டர்கள்

உடுப்பிட்டி, சனி வல்வெட்டியில் இருபுதிய தியேட்டர்கள் உருவாகவிருக்கின்றன. இதற்கான அனுமதியை உடுப்பிட்டிக் கிராமசபை வழங்கியுள்ளது.


**REGAL** JAFFNA
Daily at 10-30 A.M., 4-45, 7-00 & 9-45 P.M.
Frederick Stafford
Marina Vlady
in
**Terror in Tokyo**

**RAJAH** JAFFNA
Daily at
10-30 a.m. 4-45, 7-00, & 9-45 p.m.
George Ardission-
as Secret Agent 3 S 3
in
**HUNTER OF THE UNKNOWN**
Technicolor & Scope

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 10-00 மணி
ஜெய்சங்கர்- வாணிஸ்ரீ
தங்கவேலு
நடித்த
காதல் படுத்தும் பாடு

ராணி
(யாழ்ப்பாணம்)
நடித்த
பணமா பாசமா


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சுன்னாகம், வட-இலங்கைத் தமிழ்நூற்பதிப்பகப் பிரசுரங்கள் ஆருத்திர இரண்டாம் பருவப் பரீட்சைக்குரிய ஆங்கிலம், கணிதம், சரித்திரம், சைவசமயம், தமிழ் மொழியும் இலக்கியமும், புவியியல், பொதுவிஞ்ஞானம் முதலிய பாடங்களுக்குக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட வழிகாட்டிகளுக்கமையப் புதுமுறை விளக்கங்கொண்ட பயிற்சி நூல்கள். எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். 1215

### தேவை

ஒரு பிரபல்ய ஸ்தாபனத்துக்கு சேட் தைக்கக் கூடிய நல்ல தேர்ச்சிபெற்ற பெண்கள் உடன் தேவை. அனுபவ அத்தாட்சிகளுடன் 10ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1216, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1216

Foreman for Motor Vehicles Repairs Garage. Apply with Copies Recent Testimonials Stating Qualification, Experience, Salary Expected Advertisement No1213 C/o Eelanadu Jaffna. 1213

### உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

உடுவில், விசாழன் வலிகாமம் வடக்கு உடுவில் பகுதி விளையாட்டுச் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் 1968-ம் ஆண்டுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இம்மாதம் 11-ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

இப்போட்டி அமைப்பின் கீழ் ஏழு விளையாட்டுக் கழகங்களும், ஆறு சன சமூக நிலையங்களும் கலந்துகொள்கின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்திலும், கட்டுவன் விளையாட்டுக் கழக மைதானத்திலும் இந்த உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெறும்.

## நெல்லியடிப் பட்டினம் கேள்வி விளம்பரம்

1968-ம் ஆண்டு ஆடி மாதம் 18-ந் திகதி [18.7.68] முற்பகல் 10-30 மணி வரைக்கும் மேற்படி பட்டின விசேஷ ஆணையாளரால், கீழ்க்காணும் வேலைகளுக்கு, பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து, சீல் வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும், கேள்விப்பிணைப் பணம் ரூபா 50/-ம், பத்திரப்பணம் ரூபா 5/-ம் செலுத்தியபின் பேரில் 16-7-68 பிற்பகல் 1-30 மணிவரை விசேஷ ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரத்தில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் யாவும் நெல்லியடிப்பட்டின விசேஷ ஆணையாளரின் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

ச. முருகவேள்,
விசேஷ ஆணையாளர்.

### வேலைகளின் விபரம்


1. துலாக்கட்டு ஒழுங்கை திருத்தி அமைத்தல்.
2. எல்லைத் தெருத் திருத்தம்-இரண்டாம் வட்டாரம்.
3. ஞானசாரியார் தெருத் திருத்தம்.
4. தச்சன் தோப்பு தெருவுக்கு கல்லுப்பதித்தலும், தார் ஊற்றலும்.
5. தல்லையப்புலம் தெருவுக்கு கல்லுப்பதித்தலும், தார் ஊற்றலும்.
6. சண்டிக்குளத் தெருத் திருத்தம்.
7. கன்பொல்லை குறுக்குத் தெருத் திருத்தம்.
8. எல்லைத் தெருவுக்கு கல்லுப்பதித்தலும் தார் ஊற்றலும்.—7ம் வட்டாரம்.

விசேஷ ஆணையாளர் அலுவலகம்,
நெல்லியடிப்பட்டினம்,
கரவெட்டி, 5.7.68. 867


மானிப்பாய்

## வெஸ்லி சினிமா

தினசரி 6-30, 9-30க்கும் விடுமுறை தினங்களில் 2-30க்கும்



ஜெய்சங்கர்—ஜமுனா—சுந்தரராஜன்
நாகேஷ்—ஜி. வரலக்ஷ்மி
நடித்த
குழந்தையும் தெய்வமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் அங்காடி வியாபாரிகளுக்குத் தடை

## நல்லூர் ஆலய வருடாந்த உற்சவ ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் கந்தசாமி கோவில் இவ்வருட மகோற்சவத்தின் போது கோவில் நான்கு வீதிகளிலும் அங்காடி வியாபாரம் செய்யவும் நடைபாதையில் 'ஐஸ் கிறீம்' பலூன், வெடிகள் ஆகியன விற்பனை செய்யவும் முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தவிர கோவிலின் நான்கு புறத்திலும் மூடப்பட்ட வீதிகளுக்குள்ளே எந்த விதமான தற்காலிக கடைகளோ, விற்பனை நிலையங்களோ திறவவும் அனுமதி வழங்குவதில்லையென மாநகரசபை ஆணையாளர், பொலிஸ் அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள் கூட்டிய மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

கோவில் மகோற்சவம் இம்மாதம் 30-ம் திகதி நடைபெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது. அடுத்த மாதம் 22-ம் திகதி தேர் உற்சவமும், 23-ம் திகதி தீர்த்தோற்சவமும், 24-ம் திகதி பூங்காவனமும் நடைபெறும்.

இம்மாதம் 29-ம் திகதி நள்ளிரவுடன் கோவிலின் நான்கு வீதிகளும் போக்குவரத்தின்றி மூடப்படும். இதனை முன்னிட்டு வீரமாகாளி அம்மன் கோவில் சந்தி, கைலாசபிள்ளையார் கோவில் சந்தி, முத்திரைச் சந்தி, திருநெல்வேலி சிவன் கோவில் வீதி சந்தி ஆகிய நான்கு இடங்களிலும் 15 டாக்ஸிகள் நிறுத்தும் தற்காலிக டாக்ஸி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இறுதி மூன்று நாட்களிலும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் நல்லூருக்கு விசேட பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வழக்கம்போல தேர்தீர்த்த உற்சவங்களை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஒலிபரப்பு செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஈ. நி)

## பிரிட்டனுடன் ராஜிய உறவுகள்

### தான்ஸானியா புதுப்பிக்கும்

டார் எஸ் ஸலாம், ஜூலை 6

பிரிட்டனுடனான ராஜிய உறவுகளை மீண்டும் புதுப்பிப்பதெனத் தான்ஸானியா முடிவு செய்துள்ளது.

ரொடீஷிய பிரச்னைமீது, 1965-ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில், பிரிட்டனுடனான தனது ராஜிய உறவுகளைத் தான்ஸானியா முறித்துக்கொண்டது.

இப்போது மீண்டும் பிரிட்டனுடன் ராஜிய உறவுகளை வைத்துக்கொள்ள முடிவு செய்திருப்பதற்குத் தான்ஸானியா எவ்வித காரணங்களையும் தெரிவிக்கவில்லை.

ஆனால், ரொடீஷியாவுக்கு எதிராக பிரிட்டிஷ் அரசாங்கம் அண்மையில் நிறைவேற்றிய புதிய தடைகளே, தான்ஸானியாவின் இந்த முடிவுக்கு முக்கிய காரணம் எனப் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்ற இலக்கியக் குழுவின் தலைவராக இருந்து இடமாற்றலாகிச் செல்லும் காணி அபிவிருத்தி அதிகாரியான திரு. அ. உருத்திரமூர்த்தி [மகாகவி]க்கு இன்று மாலை 4-30 மணிக்கு தேனீர் விருந்தொன்று அளிக்கப்படவிருக்கின்றது. நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் திரு. சீ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்துக்கு அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(ஈ. நி.)

## மத்தியஸ்தர்கள் சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்க புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. இ. கனகலிங்கம், உபதலைவர்கள்: திரு. என். தேவபாலசுந்தரம், திரு. எஸ். சோமசுந்தரம், செயலாளரும் பொருளாளரும்: திரு. இ. கே. குமரையா, உபசெயலாளர்: திரு. எஸ். ஜீ. தேவா, கணக்குப்பரிசோதகர்: திரு. எஸ். ஏ. சத்தியாபிள்ளை, 4 பேர்கொண்ட நிர்வாகக்கமிட்டியொன்றும் தெரியப்பட்டது. [ஈ. நி.]

## லொறி மோதி சிறுமி மரணம்

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலையில் சீனக்குடாவில் அநுராதபுரம் சந்தியில் லொறி யொன்று ஐந்து வயதுச் சிறுமி மீது மோதியதில் சிறுமி ஸ்தலத்திலேயே மாண்டார். சிறுமியைக் கொன்ற லொறி பின்னர் கடைக்குள் நுழைந்து நின்றது.

சீனக்குடாவுக்கு நாவலப்பிட்டியிலிருந்து இந்த லொறி தேயிலை ஏற்றிக் கொண்டு வந்திருந்தது.

### வீ. சுந்தரலிங்கத்தின்

## கொடும்பாவி எரிக்கப்படும்?

திருகோணமலை, சனி

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கும் வவுனியா முன்னாள் எம். பி. திரு. வீ. சுந்தரலிங்கத்தின் கொடும்பாவியை எரிப்பதென திருகோணமலை தமிழர் முன்னேற்ற மகாசபை செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவரது கொடும்பாவியை பிரேதபெட்டியில் வைத்து இம்மாதம் 17-ம் திகதி நகரவீதிகளால் எடுத்துச் செல்லப்பட்டு பெரிய மயானத்தில் எரிக்கப்படுமென மேற்படி மகாசபையின் தலைவர் திரு. வே. கணேசன் தெரிவித்துள்ளார்.

## எழுவை தீவு மக்கள் கோரிக்கை

அனலைதீவு, சனி

எழுவைதீவுக்கு அரசாங்க அதிபர் திரு வேர்னன் அபயசேகரா சமீபத்தில் விஜயம் செய்தசமயம் எழுவை தீவுக்கு தேவையான அத்தியாவசிய கருமங்களைச் செய்து தருமாறு பொதுமக்கள் சார்பில் திரு. ஆ. தேவசகாயம் ஆசிரியர் கேட்டுக் கொண்டார். அரசாங்க அதிபருடன் உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளை, தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம் ஆகியோரும் சென்றிருந்தனர்.

## கென்னடி முதலிடம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 2-ந் திகதி நடைபெற்ற கட்டப்பராய் சனசமூகநிலைய விளையாட்டுப்போட்டியில் கென்னடி இல்லம் முதலாம் இடத்தையும் வின்சன் இல்லம் இரண்டாம் இடத்தையும் லிங்கன் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன. இம்மாதம் 8-ந் திகதி நடைபெற இருந்த இப்பரிசளிப்புவிழாவும், ஆண்டுவிழா நிகழ்ச்சிகளும் பின்போடப்பட்டுள்ளது.

## பரிசளிப்பும் ஸ்தாபகர்விழாவும்

அளவெட்டி, சனி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஸ்தாபகர் ஞாபகதினமும், பரிசளிப்பு வைபவமும் இம்மாதம் 9-ந் திகதி நடைபெறும்

மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் கலாநிதி ஜீ. பி. மலலசேகராவும் உரை நிகழ்த்துவார். சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. பாலசிங்கமும் கலந்துகொள்வார்.

## நாவாந்துறைக்கு விளையாட்டு மைதானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவாந்துறை சன சமூக நிலையத்துக்கென ஒரு நிரந்தரமான விளையாட்டுமைதானம் இல்லாத குறையை வெகுவிரைவில் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி சன சமூக நிலையத்துக்கென ஒரு விளையாட்டு மைதானத்தை நிறுவுவதற்கு விளையாட்டமைச்சு 1000 ரூபாவை யாழ், மாநகரசபையிடம் வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. இதன் காரணமாக மேற்படி நிலையத்துக்கருகாமையிலுள்ள ஒரு குப்பை மேட்டை விளையாட்டு மைதானமாக்குமுகமாக நூற்றுக்கணக்கான சன சமூக நிலையத்தைச் சேர்ந்த வாலிபர்கள் சிரமதான முறைப்படி சுத்திகரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

[வி. நி]

## கரபந்தாட்ட பயிற்சி

உடுவில், வியாழன்

வலிகாமம் வடக்கு உடுவில் விளையாட்டுச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் கரபந்தாட்ட பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 26-ம் திகதி தொடங்கி நடைபெறும்.

இணுவில் சந்தை மைதானத்திலும், குப்பிளான் சன சமூக நிலைய மைதானத்திலும் இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

அகில இலங்கை கரபந்தாட்டப் பயிற்சியாளரான திரு. சுழேந்திரா இப்பயிற்சி வகுப்புக்களை நடாத்துவார்.

சிங்களத் தேர்ச்சி

# மொழிவழி தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை

## எழுதுவினைஞர் சங்கம் ஆலோசனை

வெள்ளவத்தை, சனி

'இந்நாட்டில் உரிமையோடுவாழ எமக்கும் இடம் இருக்கிறது என்பதை நிலை நாட்டவேண்டும் என்பதற்காகவே தமிழ் பேசும் அரசாங்கஊழியர்களாகிய நாம் மொழிவழித் தொழிற் சங்கமாகப் பிரிந்தோம், ஆனால் இன்று சிங்களம் படிப்பதற்கு மேலும் அவகாசம் வேண்டிய நிலைக்கு எமது மொழிவழித் தொழிற்சங்கங்கள் ஆக்கப்பட்டுள்ளன. புதியஊழியர்களின்மொழிப் பிரச்னை எமக்கு மிக முக்கியமானதாகவும் விரைவில் தீர்த்துவைக்கப்படவேண்டியதாகவும் உள்ளது. எமது திணைக்களத்தில் தற்போது பாதிக்கப்படக்கூடிய சிங்களத்திறமை இல்லாத தமிழ் பேசும் ஊழியர்களின் பட்டியலைஎடுத்தபின்னர் ஏனைய மொழிவழித் தொழிற் சங்கங்களுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆலோசிப்போம்'.

இவ்வாறு வெள்ளவத்தையில் நடைபெற்ற அஞ்சல் எழுதுவினைஞர் சங்க நிர்வாகசபையின் விசேட பொதுக்கூட்டத்தில் பிரதம தபாற்கந்தோரின் காசுக் கணக்கீட்டுக்கிளையைச் சேர்ந்த திரு. க. பேரம்பலம் கூறினார். புதிய ஊழியர்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட இந்தக் கூட்டத்தில் சங்கச்செயலாளர் திரு ஆ. சிவபாலரத்தினம், தலைவர் திரு ஏ. அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். இப்புதிய ஊழியர் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கென நால்வர்கொண்ட உபகுழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# யாழ்ப்பாணத் தபால்களை உரிய நேரத்தில் பெறமுடியவில்லையாம்

## மூதூர் மக்கள் மகஜர்

மூதூர், சனி

யாழ்ப்பாணத்திலிருந்து மூதூருக்கு அனுப்பப்படும் கடிதங்கள் மூன்றும் நாளே உரியவரிடம் சேர்ப்பிக்கப்படுகிறதாம். காலை 9.30 மணிக்கு தபால் விநியோகம் செய்யப்பட்ட பின்னரே யாழ்ப்பாணத்தபால் காலை 11.45 மணிக்கு மூதூருக்கு வருகிறதாம். ஒ நாள் தபால் வந்தோரில் தேங்கிக்கிடக்கும் இத்தபால்களை மறுநாளே விநியோகிக்கப்படுகிறதாம். இதனால் இப்பகுதிமக்கள் மிகவும் கஷ்டமுறுகின்றனர்.

காலையில் ஒரு முறையும் யாழ்ப்பாணத்தபால் வந்த பின்னர் இரண்டாம் முறையும் தபாலை விநியோகம் செய்ய ஒழுங்குசெய்யுமாறு இப்பகுதி மக்கள் மகஜர் ஒன்றை மூதூர் அஞ்சல் அதிபருக்கும், கொழும்பு அஞ்சல் அதிபட்சருக்கும் வடபகுதி பெரும்பாக அஞ்சல்நிலைய அதிபட்சருக்கும் அனுப்பிவைத்துள்ளாரகள், 3 வருடங்களுக்கு முன்னர் இவ்விதம் நடைபெற்றதாகவும், கடந்தவருடங்களில்இவ்விதமுறை நிறுத்தப்பட்டதால் இப்பகுதி மக்கள்யாழ்ப்பாண அவசரக் கடிதங்களைப் பெறுவதில் தாமதம் ஏற்படுவதாகவும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

கிளிவெட்டி அரசினர் தமிழ் வித்தியாலயத்திற்கு விளையாட்டு மைதானத்திற்கென ஓர் ஏக்கர் நிலத்தைப் பாடசாலைக்கு அருகாமையில் அரசாங்கம் வழங்கியுள்ளது. விளையாட்டு மைதானத்தை வட்டார வித்தியாதிபதி திரு. ஏ. வி. முகம்மது திறந்துவைத்தார்.

ஃ ஃ

மூதூரில் அத்துமீறிக் குடியேறியதாக 16 தமிழ்வாலிபர்களைப் பொலிஸார் கைது செய்ததாகவும், உடுவில் எம்.பி. திரு. தர்மலிங்கத்தின் தலையீட்டால் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் தெரிகிறது.

## புலமைப் பரிசில் பெறுவோர்

உடுவில், சனி

தொழில்நுட்ப திணைக்களத்தினரால் வழங்கப்பட்டபுலமைப்பரிசில், கல்வி வரிசைப் பரிசில்களைத் தட்டிக்கொண்ட யாழ்ப்பாண கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின்விபரம் வருமாறு:-

புலமைப்பரிசில்: பி. ஆனந்தமோகனதாஸ், என். நாராயணன், கே. ஆனந்தமணி, என். திருச்செல்வம், எஸ். முத்துலிங்கம், கே. திருநடனசிவம், ஏ. மருதையினார், பி. சிவகுமரன், என். திருச்செல்வம்.

கல்விவரிசைப் பரிசில்: ஆர். பகவதீஸ்வரஐயர், சி. பி. பாலச்சந்திரா, எஸ் ஆனந்தகுமாரதாஸ், ஏ. புவனேசசிங்கம், ஆர். புவிராசேந்திரம், எஸ். நவநீதராசா, பி. ஜே. ஏ.எட்மன், கே, பாலசிங்கம், ஏ. பி. குமாரசாமி, ஆர். துரைநாயகம். இப்போட்டி இவ்வருடமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை, சனி

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலும் கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தைபோல் ஒலிபெருக்கி வசதி செய்யும்படி காங்கேசன்துறை தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி போக்குவரத்து மந்திரிக்கும், தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

## சுவாஸிலாந்துக்கு சுதந்திரம்

லண்டன், ஜூலை 6

சுவாஸிலாந்துக்குச் சுதந்திரமளிக்கும் மசோதா, பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தென் கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள சுவாஸிலாந்தின் பரப்பு 6,704 சதுரமைலாகும். ஜனத்தொகை 280,000க்குமதிகமாகும்.

எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில், சுவாஸிலாந்துக்குச் சுதந்திரமளிக்கப்படவிருக்கிறது.

## ஆயுர்வேத...!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்களின் விபரம்:-

டீ. ஏ. எம்.

முதலாம் பிரிவு:-

கே. கே. ஜெயரட்ணம்.

இரண்டாம் பிரிவு:-

எஸ். ஸ்ரீவிக்னேஸ்வரா, ரீ. தர்மதுரை, எஸ். பேரம்பலம்.

கே. குபேந்திரநாதன், கே. வேலும்மயிலும், கே. சுப்பிரமணியம், வீ. பேரின்பம்,

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org